# உபதேச விஷயங்களை எதிர்கொள்ளுதல்

*சபை நடத்துனர்களினால் எதிர்கொள்ளப்படும் அறைகூவல்கள் யாவற்றிலும், சபைக்குள்ளாக உபதேசத்தில் கருத்து வேறுபாடு ஒன்றைக் காட்டிலும் அதிக வலிவானது வேறு ஒன்றும் இல்லை. உபதேச மாறுபாடுகளின் விளைவுகளில், சகோதரத்துவங்கள் முறிந்து போகுதல், சபை பிரிதல்கள், பிரிந்த இல்லங்கள், உடைந்த இருதயங்கள், ஏற்றுக்கொள்ளாத சமூகங்கள் மற்றும் இழந்துபோகப்பட்ட ஆத்துமாக்கள் ஆகியவை உள்ளடக்கப்பட முடியும். உள்ளூர் சபையில் உபதேசம் பற்றிய கேள்விகள் எழுகின்ற பொழுது என்ன செய்யப்பட முடியும்?*

*மூப்பர்கள் செயல்படத் தேவையான உபதேசம் பற்றிய விவாதங்கள் ஒரு வழிமுறையில், முதலில் நாம் கூறியுள்ளவைகளுக்கு விரோதமற்றவைகளாகக் காணப்படலாம். மூப்பர்கள், மேய்ப்பர்கள் என்ற வகையில் வழி நடத்தி, தங்கள் பராமரிப்பின்கீழ் இருப்பவர்களை முன்னுதாரணத்தின் மூலமாகவும், தூண்டுதல் மற்றும் இணங்கச் செய்தல் ஆகியவற்றினாலும் மென்மையாய் வழிநடத்த வேண்டும் என்று நாம் வலியுறுத்தியுள்ளோம். மேற்கொள்ளப்பட வேண்டிய சிறந்த வழிமுறை பற்றி ஒத்த கருத்தை அடைவதற்கு சபை உறுப்பினர்களுக்கு ஞானத்துடன் உதவுவதின் மூலம் மூப்பர்கள் சபையை வழக்கமாய் வழிநடத்துகின்றனர். இருப்பினும், சபையில் நம்பிக்கையின் ஒத்த கருத்தின்படியில்லாமல் அதிகாரத்துவத்துடன் செயல்பாட்டை மேற்கொள்ள வேண்டிய ஒருவேளையானது சபை ஒன்றின் மூப்பர்களுக்கு வந்து சேரலாம்! சபையில் உள்ள யாராவதொருவர் சத்தியத்திலிருந்து திரும்பி, மக்களை இழந்துபோகச் செய்யக்கூடிய உபதேசங்களைப் போதித்து நடைமுறைப் படுத்துகின்ற பொழுது இப்படிப்பட்ட வேளையானது வருகின்றது!*

*அது நடக்கின்ற பொழுது, மேய்ப்பனின் ஒப்புவமையானது இன்னமும் பயன்பாட்டிற்குரியதாக உள்ளது. அப்பொழுது, ஆடுகளிடம் மென்மையாய் நடந்து கொண்டுள்ள மேய்ப்பன், தேவனுடைய மந்தையை அழிக்கின்ற "கொடிதான ஓநாய்களை"த் தோல்வியுறச் செய்வதற்கு (அப். 20:29, 30) தேவையான எல்லாவற்றையும் - வேதாகம ரீதியாக, சட்ட ரீதியாக, ஒழுக்க ரீதியாக உள்ளவைகளின் கட்டுகளுக்குள் - செய்கின்றார். காணாமற் போன ஆட்டைக் கண்டு பிடித்து அதைத் தனது தோள்களின் மேல் மென்மையாக வைத்து, வீட்டிற்குக் கொண்டு வந்த அதே மேய்ப்பன் (லூக். 15:4-6) மந்தையை இரையாக்க வந்த ''சிங்கங்களையும்'' "கரடிகளையும்" அழிக்கத் தனது ஆயுதத்தைப் பயன்படுத்திய தாவீதைப்*

போல் (1 சாமு. 17:34-36) ஆகின்றார். ஆடுகளுக்கு உணவளித்தல், வழிநடத்துதல், நாடுதல் மற்றும் ஆறுதல் அளித்தல் ஆகியவை போன்றே மந்தையை கொள்ளையிடுகிறவர்களிடத்திலிருந்து அதைப் பாதுகாத்தல் என்பதும் மேய்ப்பனின் பணியின் பொறுப்பான பாகமாய் உள்ளது.

உபதேச ரீதியான கருத்து வேறுபாடு என்பதன் ஒவ்வொரு விஷயமும் கண்டிப்பான தீர்க்கமான செயல்பாட்டிற்கு அழைப்பு விடுப்பதில்லை. உபதேச மாறுபாடுகள் சபைகளைப் பிரித்திருக்கக் கூடாத பொழுது, அவைகள் சபைகளைப் பிளவு படுத்தின என்பது துன்பகரமானதாக ஆனால் உண்மையானதாக உள்ளது. உபதேச ரீதியான பிரச்சனைகளை எதிர் கொள்ளும்பொழுது சபை நடத்துனர்கள் விவேகத்துடன் செயல்பட வேண்டும். குறிப்பாக அவர்கள், (1) உபதேசத்தில் கருத்து வேறுபாடுகள் எழாத வகையில் சபையை வழிநடத்துவதற்கும், (2) பிரச்சனைகள் எழும் பொழுது அவற்றைத் தக்க முறையில் கையாளவும் பொறுப்புடையவர் களாய் உள்ளனர். உபதேச ரீதியான பிரச்சனைகளைத் தடை செய்யவும் அவற்றைத் தீர்த்து வைக்கவும் அவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

## உபதேச ரீதியான பிரச்சனைகளைத் தடை செய்தல்

உபதேச ரீதியான பிரச்சனைகளைப் பொறுத்தமட்டில், "தடை செய்தல் என்பதே மிகச் சிறந்த நிவாரணமாக" உள்ளது. உபதேச ரீதியான பிரச்சனைகளைத் தடை செய்வதற்கு சபையின் நடத்துனர்கள் ஐந்து படிநிலைகளை மேற்கொள்வது அவசியமாக உள்ளது.

### பக்தி விருத்தியூட்டுதலை வலியுறுத்துதல்

எல்லாவற்றிற்கும் மேலாக, சபையானது எல்லா வேளைகளிலும் உறுப்பினர்களைக் கட்டி எழுப்புகின்றதும் சமாதானத்தை வளர்விக்கின்றது மான கொள்கைகளை வலியுறுத்துகின்றது என்பதை சபை நடத்துனர்கள் உறுதிப்படுத்த வேண்டும் (ரோமர் 14:17, 19). அன்புகூருவதிலும், உதவி செய்வதிலும், போதிப்பதிலும் மற்றும் ஆத்துமாக்களை இரட்சிப்பதிலும் தீவிரமாய் இருக்கும் சபையானது முக்கியமற்ற விஷயங்களைப் பற்றி முணுமுணுப்பதற்கு நேரமோ ஆர்வமோ இல்லாததாகவே இருக்கும்.

எந்த சபையும் கருத்துக்களில் பல்வகைத்தன்மை உடையதாயிருக்கும். இருந்த போதிலும், ஏறக்குறைய எந்த சபையிலும் பெரும்பாலான மக்கள், போதிக்கப்படுகின்றவைகளில் 95 சதவிகிதத்தை ஏற்றுக் கொள்வார்கள். மற்றும், அவர்களில் பெரும்பாலானோர், பெரும்பாலான நடவடிக்கை களில் மனச்சாட்சியின் எவ்விதப் பிரச்சனையுமின்றி பங்கேற்க முடியும். எனவே, வலியுறுத்துதலின் விஷயம் பற்றிய கேள்வி(யே) வருகின்றது: நாம் கருத்து வேறுபாடு கொண்டுள்ள சில கேள்விகளையா அல்லது நாம் கருத்தொருமித்துள்ள பல விஷயங்களையா - எதை வற்புறுத்துவோம்?

## சத்தியத்திற்கு ஒப்புக் கொடுத்தவர்களாய் இருத்தல்

*சபை நடத்துனர்கள் தேவனுடைய வசனத்தில் சத்தியத்திற்கு (தங்களை) ஒப்புக்கொடுத்தவர்களாய் இருத்தல் அவசியம். "ஆரோக்கிய மான உபதேசம்'' முக்கியமானதாக இருக்கிறது. இயேசு, ''கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (மத். 7:15) என்றும், "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா. 8:32) என்றும் உரைத்தார். பவுல், ''தேவனுடைய ஆலோசனையில் ... எல்லாவற்றையும்'' (அப். 20:26) பிரசங்கித்தார். கலாத்தியர் 1:6-9ல், தேவன் ஒரே சுவிசேஷத்தை மட்டுமே கொண்டுள்ளதாகப் பவுல் தெளிவாக்கினார்; அதைத் தவிர வேறெதுவும் சுவிசேஷப் புரட்டாயிருக்கின்றது, மற்றும் அவ்வாறு போதிக்கின்றவர் ஆக்கினைக்குள்ளானவராயிருக்கிறார். ''பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைப்'' பற்றி யூதா பேசினார் (யூதா 3). தீமோத்தேயுக்கும் தீத்துவுக்கும் எழுதப்பட்ட நிருபங்களில் வசனத்தைப் பிரசங்கித்தல், ஆரோக்கியமான உபதேசத்தைக் கைக்கொள்ளுதல், மற்றும் கள்ள போதகர்களைத் தவிர்த்து மறுத்தல் ஆகியவற்றிற்கான அறிவுறுத்தல் கள் ஏராளமாய் உள்ளன (1 தீமோ. 1:3-7; 4:1-6; 6:3-5; 2 தீமோ. 4:1-5; தீத்து 1:12-16; 2:1). கள்ள போதகர்களுக்கு எதிரான எச்சரிக்கைகள் 2 பேதுரு 2:1-3, 1 யோவான் 4:1-3 மற்றும் 2 யோவான் 7-11 ஆகியவற்றில் தரப்பட்டுள்ளன. உபதேசம் ஒரு பொருட்டல்ல என்று கூறும் எவரொருவரும் புதிய ஏற்பாட்டை வாசித்திருக்கவில்லை அல்லது அதை விசுவாசிக்கவில்லை என்றே ஆகின்றது!*

*ஆரோக்கியமான உபதேசம் முக்கியமானதாயிருப்பதால், சபை நடத்துனர்கள் சத்தியத்தை உயர்த்திப் பிடித்திருப்பதை நிச்சயித்துக் கொள்ளுதல் அவர்களுக்கு அவசியமானதாக உள்ளது. தீத்து 1:9ல் பவுல், மூப்பர் என்பவர், "ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும், எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்" என்று கூறினார்.*

*கள்ள போதகர்களிடமிருந்தும் கள்ள போதகத்திடமிருந்தும் சபையைப் பாதுகாத்தல் என்பது மூப்பர்களின் முக்கியமான பணியாகும் என்று எண்ணப்படக் கூடும். (அப். 20:28-31ஐக் காணவும்.) தீத்து 1:9-11ன்படி இந்தப் பணியானது, குறைந்தது நான்கு பொறுப்புக்களை யாகிலும் நிறைவேற்றும்படி மூப்பர்களைக் கேட்டுக் கொள்கிறது. (1) சத்தியத்திற்கும் தவறுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பகுத்துணரப் போதுமான அளவுக்கு சத்தியத்தை அறிதல். அவர்கள், "போதிக்கப்பட்டதற் கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்கிறவர்களாய்" (வ. 9) இருக்க வேண்டும். (2) சத்தியத்தைப் போதித்தல் மற்றும் தாங்கள் ஊழியம் செய்யும் சபைக்குழுமத்தில் சத்தியம் போதிக்கப்படுதலைக் காணுதல்: மூப்பர்கள் "ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்ல ... வல்லவர்களாயிருக்க வேண்டும்" (வ. 9). (3) கள்ளப் போதகர்களையும் கள்ள போதகத்தையும் மறுத்துரைக்க வல்லவர்களாயிருக்க வேண்டும். மூப்பர்கள் ஆரோக்கியமான உபதேசத்தினாலே "எதிர் பேசுகிறவர்களைக்*

*கடிந்து கொள்ள'' வல்லவர்களாய் இருக்க வேண்டும் என்று வசனம் 9 கூறுகின்றது. (4) கள்ள போதகர்களிடமிருந்தும் கள்ள போதகத்திட மிருந்தும் மந்தையைப் பாதுகாத்தல். இது எதற்காக என்று வசனங்கள் 10 மற்றும் 11ல் பவுல் விளக்கினார்: ''அநேகர் ... அடங்காதவர்களாய் இருக்கிறார்கள் ... அவர்களுடைய வாயை அடக்க வேண்டும் ...''*

## சத்தியத்தைப் போதித்தல்

*ஆரோக்கியமான உபதேசம் என்பது முக்கியமானதாக இருப்பதால், நிலையான போதனை என்பது மாபெரும் தேவையாய் உள்ளது. "உபதேச" பிரசங்கங்கள் ஒருக்காலும் பிரசங்கிக்கப்படவில்லையென்றால், சபையானது கள்ள போதகர்களின் செல்வாக்குக்கு உட்பட்டு விடும். எந்த வேளையிலும் நாம் விசுவாச விலக்கத்திலிருந்து ஒரே ஒரு தலைமுறை மட்டுமே அப்பால் இருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்!*

## அபிப்பிராய வட்டாரத்தில் சுதந்தரத்தை அனுமதித்தல்

*விசுவாசம் தொடர்பான விஷயங்கள் மற்றும் அபிப்பிராய தொடர்பான விஷயங்கள் ஆகியவற்றுக்கிடையில் வேறுபாடு காண்பது என்பது சபை நடத்துனர்களுக்கு முக்கியமானதாக உள்ளது. அபிப்பிராய வட்டாரத்தில் உறுப்பினர்கள் விரும்புவதை நம்புவதற்குச் சுதந்திரம் அளிக்க அவர்கள் (நடத்துனர்கள்) முடிவு செய்ய வேண்டும்.*

*''விசுவாசம் தொடர்பான விஷயங்கள்'' மற்றும் ''அபிப்பிராய தொடர்பான விஷயங்கள்'' என்பவற்றினால் நாம் அர்த்தப்படுத்துவது என்ன? புதுப்பித்தல் என்ற இயக்கத்தில் இந்த வித்தியாசமானது, "விசுவாசம் தொடர்பான விஷயங்களில் ஒருமைப்பாடு; அபிப்பிராய தொடர்பான விஷயங்களில் சுயாதீனம்; எல்லா விஷயங்களிலும் ஈகை அன்பு" என்ற கூற்றினால் புரிந்துகொள்ளப்பட்டது. ''விசுவாசம் தொடர்பான விஷயங்கள்'' என்பவை புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தின் காலங் கடந்த அம்சங்களுடன், புதிய ஏற்பாட்டின் சபையொன்று நாட்டப்படும் பொழுது போதிக்கப்பட வேண்டிய காலத்தினூடே மாறாத முக்கியமான விஷயங்களுடன் தொடர்புடையவைகளாய் உள்ளன. ''அபிப்பிராய தொடர்பான விஷயங்கள்'' என்பவை முதல் நூற்றாண்டு கிறிஸ்தவ நடைமுறைக்கு அவசியமற்றவையாய் உள்ள கேள்விகள் ஆகும்.*

*புதிய ஏற்பாட்டில் இன்றியமையாதவை மற்றும் முக்கியமற்றவை ஆகியவற்றுக்கிடையே ஒருவர் எவ்வாறு வித்தியாசப்படுத்த முடியும் என்பதை விளக்கப்படுத்துவதற்கு இது இடம் அல்ல. மாறாக, இந்த இரு வகைகளில் நாம் விஷயங்களைப் பொதுவாகப் பிரித்துள்ளோம் என்று மட்டும் உறுதிப்படுத்துகிறோம். எடுத்துக்காட்டாக, முழுக்காட்டுதலினால் ஞானஸ்நானம், இசைக் கருவிகளின்றி ஆராதனையில் பாடுதல், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளில் (மட்டும்) கர்த்தருடைய பந்தி முதலியவற்றை நாம் பொதுவாக விசுவாசம் தொடர்பான விஷயங்களாக வகைப்படுத்தியிருக் கிறோம். இதற்கு மறுபுறத்தில், கர்த்தருடைய நாளில் சபையானது*

எப்பொழுது மற்றும் எங்கு கூடிவருகின்றது, ஞானஸ்நானம் எங்கு நடைபெறுகின்றது, கர்த்தருடைய பந்தியில் திராட்ச ரசம் அருந்த நாம் ஒரே பாத்திரத்தைப் பயன்படுத்துவதா அல்லது பல சிறிய பாத்திரங்களைப் பயன்படுத்துவதா முதலியனவற்றை நாம் கருத்து தொடர்பான விஷயங் களின் கேள்விகளாக வகைப்படுத்தியிருக்கின்றோம்.

ஒரு குறிப்பிட்ட விஷயமானது விசுவாச தொடர்பான விஷயமாய் இருப்பதற்கு மாறாக அபிப்பிராய வட்டாரத்தில் உள்ளது என்று சபை நடத்துனர்கள் முடிவு செய்யும் பொழுது, அதை நம்புவதற்கு உறுப்பினர் களுக்குச் சுதந்தரத்தை அவர்கள் அனுமதிக்க வேண்டும், மற்றும் அவர்கள் எல்லா உறுப்பினர்களும் மாறுபட்ட அபிப்பிராயங்களைப் பற்றிக் கொண்டிருப்பவர்களைச் சகித்துக் கொள்ள வேண்டும் என்றும் போதிக்க வேண்டும்.

## கள்ள போதகம் குறித்து எச்சரிக்கையாய் இருத்தல்

சபை நடத்துனர்கள் தாங்கள் நோக்கும் இடங்களில் எல்லாம் கள்ள போதகர்களையும் கள்ள போதகத்தையும் காணும் மாய வேட்டைக்காரர் களாய் இருக்கக் கூடாது. அதற்கு மாறாக, அவர்கள் கள்ள போதகர்களைக் குறித்து "எச்சரிக்கையாய்" இருக்க வேண்டும் என்று வேதாகமம் கேட்டுக் கொள்கின்றது, ஏனெனில் அப். 20:28-31ல் பவுல் பின்வரும் எச்சரிக்கையை மூப்பர்களுக்குக் கொடுத்தார்:

> ஆகையால், உங்களைக்குறித்தும், … பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கை யாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடி தான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடான வைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், … விழித்திருங்கள்.

மூப்பர்கள் கள்ள போதகம் மற்றும் அபாயமான போதனைகளைக் கேள்விப்படும் பொழுது அவற்றைப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாய் இருப்பதற்கு விழிப்புணர்வின் இந்த நிலைக்கான அவசியம் பற்றிக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. பதிலுக்கு இது, நடத்துனர்கள் மற்ற இடங்களில் உள்ள உபதேச பிரச்சனைகள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று(ம்) கேட்டுக் கொள்கின்றது. சபையில் யார் என்ன போதிக்கின்றனர் என்று அவர்கள் அறியும்படிக்கு நிச்சயமாகவே கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

கள்ள போதனை குறித்து எச்சரிக்கையாய் இருப்பதும் மற்றும் அது முதலாவதாக வருகையில் அதனைப் புரிந்து கொள்ளுவதும், அது ஒரு பிரச்சனையாவதற்கு முன்பே அக்கேள்வியைக் கையாள நடத்துனர்களுக்கு வாய்ப்பளிக்கும் என்பது உறுதி. அவர்கள் பிரிஸ்கில்லாள் மற்றும் ஆக்கில்லாவைப் போல, தவறாகப் போதிப்பவர்களைத் தனிப்பட

அழைத்து அவர்களுக்கு தேவனுடைய வழியை தனிப்பட்ட வகையில் மிகவும் சரியாக விளக்கப்படுத்தக் கூடியவர்களாய் இருக்கலாம் (அப். 18:26). அந்த அணுகுமுறை தோல்வியடையுமென்றால், அவர்கள் அப்படிப்பட்ட வருடைய போதனையை அமைதியாக நிறுத்தி, அவரது செல்வாக்கை மட்டுப்படுத்தலாம். அவர்கள் எதைச் செய்தாலும், "சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களாகவும், புறாக்களைப்போலக் கபடற்றவர்களாயும்" (மத். 10:16) இருப்பது அவசியம்.

## உபதேச பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தல்

உபதேச கருத்து ஒப்புமையின்மை எழும்பும். புதிய ஏற்பாட்டு சபையில் அவை எழும்பின. ஆதி சபையின் பிராந்திய சபைகளில் உபதேசப் பிரச்சனைகள் நிலவியதை நிருபங்களின் ஒவ்வொரு பக்கமும் உண்மை யிலேயே சான்றளிக்கின்றன. அதே வழியிலேயே, உபதேசப் பிரச்சனைகள் - அவற்றைத் தவிர்க்க என்ன செய்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் - இன்றைய நாட்களிலும் தவிர்க்க இயலாத வகையில் எழுகின்றன. பின்வரும் கூற்றில் ஆறுதலின் ஒரு சிறு அளவை காணப்படுகின்றது: ஒரு சபைக்கு, உபதேசம் என்பது எதுவாக வேண்டுமானாலும் அர்த்தப்படுகின்ற நிலை இருக்கும் வரையில், சபையின் மக்கள் உபதேசத்தின் சில கருத்துக்களில் ஒப்புமையற்று இருக்க வாய்ப்புண்டு. அது (உபதேசம்) எதையாகிலும் அர்த்தப்படுத்தும் நிலையில்லாது போகும் பொழுது, உபதேசத்தின் மீதான விவாதங்களும் இல்லாமல் போகின்றது.

உபதேசக் கருத்தொப்புமையின்மையானது மாபெரும் சேதத்திற்குக் காரணமாகக் கூடும். நடத்துனர்களின் மிகச் சிறந்த முயற்சிகள் இருந்தும் கூட உபதேசம் குறித்து சபை உறுப்பினர்கள் கருத்து வேறுபடும்பொழுது என்ன செய்யப்படக் கூடும் என்பதை நாம் அறிதல் அவசியம்.

### விஷயம் எவ்வளவு தீவிரமானதாக உள்ளது என்று தீர்மானித்தல்

சகோதரர்களுக்குள்ளே வேறுபடுகின்ற விஷயத்தின் தீவிரத்தன்மை குறித்து மூப்பர்கள் தீர்மானிக்க வேண்டும். இது அவர்கள், குறிப்பிட்ட அந்தக் கேள்வியானது விசுவாச வட்டாரத்திற்குரியதா அல்லது அபிப்பிராய வட்டாரத்திற்குரியதா என்று கேட்பதை அவசியப்படுத்துகிறது. அத்துடன் அவர்கள், அந்த வேறுபாடானது கேள்வியின் மாறுபட்ட பக்கங்களில் உள்ளவர்களின் இரட்சிப்பைப் பாதிக்குமா என்றும் கேட்பது அவசியம். எடுத்துக்காட்டாக, யோவானின் சீஷர்கள் யாவரும் சபை ஸ்தாபித்த பிறகு மீண்டும் ஞானஸ்நானம் பெற்றிருந்திருப்பார்கள் என்று சிலர் நம்புகின்ற னர்; மற்றவர்களோ, சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு யோவானால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் மீண்டும் ஞானஸ்நானம் பெறத் தேவையில்லாதிருந்தது என்று நம்புகின்றனர். இது, பிரச்சனையின் இரு புறங்களிலும் உள்ள விசுவாசம் நிறைந்த சகோதர சகோதரிகளின் கேள்வியாக இருந்துள்ளது. இருப்பினும், இவ்விரு திறத்தாரும் பின்

வருவதை ஒப்புக் கொள்ளுகின்றனர்: யார் (கூறுவது) சரியாக இருந்தாலும், இவ்விஷயமானது இன்றைய நாட்களில் எவரொருவரின் இரட்சிப்பையும் பாதிப்பதில்லை, அல்லது அது நவீன மனிதர் ஞானஸ்நானம் பெறுவதன் அவசியத்தை ஒன்றுமற்றதாக்குவதுமில்லை. மற்ற கருத்து வேறுபாடுகளும் இது போன்றே உள்ளன: யார் (கூறுவது) சரியாய் இருப்பினும், கவலைப் படுமளவுக்கு அவை முக்கியமானவையல்ல, ஏனென்றால் அவை ஒருவர் தம் ஆத்துமாவை இழந்துபோவதை விளைவிக்காது. "இந்த உபதேசத்தின் போதனை மற்றும் நடைமுறை மக்கள் இழந்துபோகப்படக் காரண மாகுமா?" என்பதே விஷயத்தின் "தீவிரத் தன்மை" பற்றிய கேள்வியாக உள்ளது.

## சூழ்நிலைக்கு ஏற்றவாறு செயல்படுதல்

விஷயத்தின் தீவிரத் தன்மை குறித்து நடத்துனர்கள் ஆராய்ந்த பிறகு, சூழ்நிலைக்கு ஏற்றவாறு அவர்கள் தக்க வகையில் செயல்பட வேண்டியவர் களாய் உள்ளனர். இது கருத்தொருமைப்பாடின்மையானது விசுவாசப் பகுதியில் உள்ளதா அல்லது கருத்தின் வட்டாரத்தில் உள்ளதா என்பதன் அடிப்படையில், செயல்பாட்டின் மாறுபட்ட நடவடிக்கைகளை கேட்கின்றது.

விசுவாசம் மற்றும் அபிப்பிராயம் ஆகியவற்றுக்கிடையில் வித்தியாசங் கள் ஏற்படுத்தப்பட வேண்டும். முதல் நூற்றாண்டில் இருந்த சபைகள் இப்படிப்பட்ட வித்தியாசங்களை ஏற்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப் பட்டன. புறஜாதியார் கிறிஸ்தவர்களாவதற்கு விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்று சிலர் போதித்த பொழுது, எருசலேமில் இருந்த நடத்துனர் களுடன் கணிசமான கலந்துரையாடலுக்குப் பின், சபையாரின் ஒப்பு தலுடன், அந்த நிலைப்பாட்டிற்கு எதிராக முடிவு எடுக்கப்பட்டது (அப். 15:10, 11, 19). விருத்தசேதனம் செய்யும்படி கேட்டுக் கொள்ளும் கருத்தானது இரட்சிப்பைப் பாதித்தது; அது எதிர்த்து நிற்கப்பட வேண்டிய தாயிற்று - அது விசுவாசத்தின் விஷயமாய் இருந்தது. இது இரட்சிப்புக்கு விருத்தசேதனம் அவசியமாய் இருந்ததில்லை என்று விசேஷமாய் கலாத்தியாவில் முன்னிறுத்தி பவுல் வலியுறுத்திய அவரது நிலைப்பாடாய் இருந்தது (கலா. 2:3-5; 5:1-6).

அபிப்பிராய வேறுபாடுகள் என்பவை கருத்தின் வட்டாரத்தில் இருக்கலாம். சில வேளைகளில் உள்ளூர் சபையில் உள்ள தனி நபர்கள் அபிப்பிராய தொடர்பான விஷயங்கள் குறித்து அபிப்பிராய வேறுபடு வார்கள். இவை யாவையும் அவர்களின் அபிப்பிராய வேறுபாடானது அவசியமற்ற விஷயங்கள் பற்றியதாக இருப்பதை ஒப்புக் கொள்ளும் என்பது தெளிவு. அடிப்படை யான உபதேசங்களில் (இரட்சிப்பின் திட்டம், சபை ஆராதனை முதலியவற்றில்) அபிப்பிராய ஒப்புமை கொண்டுள்ளவர் கள் மத்தியில், அபிப்பிராய தொடர்பான விஷயங்கள் எவை மற்றும் விசுவாசம் தொடர்பான விஷயங்கள் எவை என்பதில் அபிப்பிராய வேறுபாடு இருந்தால் என்ன செய்யப்பட முடியும்? உதாரணமாக, கர்த்தருடைய பந்தியில் ஒரே ஒரு பாத்திரம் மட்டுமே பயன்படுத்தப்பட

*முடியும் என்று சிலர் நம்புகின்றனர்; மற்றவர்களோ, பாத்திரங்களின் எண்ணிக்கை என்பது அபிப்பிராய தொடர்பான விஷயம் என்று நம்புகின்றனர்.*

*இப்படிப்பட்ட அபிப்பிராய மாறுபாடுகள் நிலவும்பொழுது என்ன செய்யப்பட முடியும்? அவசியமற்றவைகளின்மீது சகோதரர்கள் அபிப்பிராய மாறுபடுகையில் சபை நடத்துனர்கள் தக்க வகையில் செயல்படுவது எவ்வாறு? இந்தக் கேள்விக்கு ரோமர் 14 ஒரு ஏவுதல் பெற்ற பதிலை அளிக்கின்றது. ரோமாபுரியின் சபையில் இரு குழுவினர் இருந்தனர். அக்குழுவினரில் ஒரு சாராரை "பலவீனர்" (ரோமர் 14:1, 2) என்றும், இன்னொரு சாராரை "பலவான்கள்" (ரோமர் 15:1) என்றும் பவுல் அழைத்தார். "பலவீனர்கள்" இருந்த குழுவானது மாமிசம் உண்ணுதல் மற்றும் நாட்களை விசேஷித்துக் கொள்ளுதல் ஆகியவற்றில் குறிப்பிட்ட கட்டுப்பாடுகளை ஏற்றுக் கொண்டது (ரோமர் 14:2, 5, 21), இதை "பலவான்களின்" குழுவானது புறக்கணித்தது. "பலவீனர்கள்," அந்த மாறுப்பாட்டை விசுவாசம் தொடர்பான விஷயம் என்று நினைத்தனர்; "பலவான்கள்" என்பவர்களோ அதை சுயாதீனத்தின் விஷயமாகக் கண்டனர். இந்த விஷயத்தில், "பலவான்களின்" குழுவானது புரிந்து கொள்ளுதலில் சரியானதாயிருந்தது: "ஒரு பொருளும் [ஒரு உணவும்] தன்னிலே தீட்டுள்ளதல்ல" (ரோமர் 14:14; வ. 20ஐயும் காணவும்).*

*இருப்பினும், இந்த சகோதரர்கள் - இரு குழுவினர் - ஒன்றுகூடி வாழக் கற்றுக் கொள்வது அவசியம் என்று பவுல் கூறினார். குறிப்பாக அவர்கள் பின்வருபவற்றைக் கற்றுக் கொள்வது அவசியமாயிருந்தது:*[1]

*(1) பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளுதல். ஒவ்வொரு குழுவும் மற்ற குழுவை ஏற்றுக்கொள்வது அவசியமாக உள்ளது. "பலவீனர்களை" தாழ்த்தாமல் "பலவான்கள்" ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்: "புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அற்பமாயெண்ணாதிருப்பானாக." "பலவான்களை" நியாயந்தீர்க்காமல் "பலவீனர்கள்" ஏற்றுக்கொள்ள வேண்டியது(ம்) அவசியம்: "புசியாதிருக்கிறவனும் புசிக்கிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக; தேவன் அவனை ஏற்றுக் கொண்டாரே" (ரோமர் 14:3; வ. 10ஐயும் காணவும்).*

*(2) தனிப்பட்ட சகிப்புத் தன்மை. "பலவான்கள்" தங்கள் சகோதரர்களினிமித்தம் தங்களது சுயாதீனத்தைக் கைவிடும்படி கேட்டுக் கொள்ளப் பட்டனர். அவர்கள் தங்கள் "சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும்" போடுவதைத் தவிர்க்க வேண்டியவர்களாய் இருந்தனர் (ரோமர் 14:13; வ. 15, 20, 21 ஆகியவற்றையும் காணவும்). ஒரு சகோதரன் இடறி விழக் காரணமாகுதல் என்பது அவரை மன நிலை குலையச் செய்வதற்கு மட்டும் காரணமாய் இருப்பதில்லை; மாறாக, அது அவர் பாவம் செய்யக் காரணமாகவும் அவரது ஆத்துமாவை இடர்ப்பாட்டில் இடுவதற்குக் காரணமாகவும் உள்ளது என்று அர்த்தப்படுகின்றது.*

*இந்த விஷயத்தில், "பலவான்கள்" சரியான நிலையில் இருந்தனர். அப்படியிருப்பினும் கூட, இந்த விவாதத்தில் "சரியானவர்களாய்" இருந்தவர்கள், தவறாயிருந்தவர்களுக்காக விட்டுக் கொடுக்கும்படி*

கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஏன்? ஒருவேளை அவர்கள் ''பலவான்களாய்'' இருந்ததால் இவ்வாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கலாம். அவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்தின் சுய தியாக இயல்பைப் பற்றி மேன்மையான புரிந்துகொள்ளுதலைக் கொண்டிருக்க வேண்டும்; பவுல், "அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும். நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக் கடவன். கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடவாமல் ...'' (ரோமர் 15:1-3) என்று கூறினார். கிறிஸ்தவர்கள் இவ்விதமான எண்ணப் போக்குடையவர்களாய் இருந்தால் உபதேசத்தில் உள்ள எத்தனையோ மாறுபாடுகள் தீர்க்கப்பட முடியும்!

*(3) ஒருவருக்கொருவர் பக்திவிருத்தியூட்டுதல்.* சபையானது, "தேவனுடைய இராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது'' என்பதைப் புரிந்து உணர வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவரும், "சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும்'' (ரோமர் 14:17, 19) நாட வேண்டும்.

*(4) உள்ளான இணக்கம்.* ஒவ்வொரு உறுப்பினரும் தேவனுடைய சித்தம் பற்றிய தம் சொந்த புரிந்து கொள்ளுதலுக்கு இணங்கியிருப்பதில் எச்சரிக்கையாய்/கவனமாய் இருக்க வேண்டும்: "ஒருவன் சமுசயப்படுகிறவனாய்ப் புசித்தால், அவன் விசுவாசமில்லாமல் புசிக்கிறபடியினால், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகிறான். விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" (ரோமர் 14:23). ஆகையால், ஒருவர் தம் சொந்த மனச்சான்றிற்கு விரோதமாய்ச் சென்றால், அவர் செய்வது இயல்பாகவே சரியானதாயிருப்பினும், அவர் பாவம் செய்கிறார்.

உள்ளூர் சபையில் உபதேச மாறுபாடுகள், *அபிப்பிராய* விஷயத்துடன் தொடர்புடையவைகளாய் இருந்தால், ரோமர் 14ன் முன்மாதிரிகள் பின்பற்றப்பட வேண்டும்.

*விசுவாசத்தின் வட்டாரத்தில் மாறுபாடுகள் இருக்கலாம்.* உபதேச விஷயமானது உண்மையில் விசுவாசத்தின் வட்டாரத்தில் உள்ளது - மற்றும் இது மக்கள் இழந்துபோகப்படக் காரணமாகலாம் - என்று சபை நடத்துனர்கள் முடிவு செய்தால், அவர்கள் என்ன செய்யக் கூடும்?

முதலாவதாக, கள்ள உபதேசத்தைப் போதிக்கின்ற எவரொருவரையும் திருத்தும்படி நடத்துனர்கள் நாட வேண்டும். ஆனாலும் இதை அவர்கள் அன்பு மிக்க வழிமுறையில் செய்ய வேண்டியது அவசியம். கள்ளப் போதகரைத் திருத்தும் விஷயத்தில் கூட, தந்திரப் பேச்சு, தனிப்பட்ட தாக்குதல்கள் அல்லது "அற்பத்தனம்'' ஆகிய குற்றமுள்ளவராய் கிறிஸ்தவர்கள் இருப்பதற்கு எவ்வித சாக்குப் போக்கும் எப்போதும் இருப்பதில்லை. எபேசியர் 4:15ன்படி, கிறிஸ்தவர்கள் "அன்புடன்'' சத்தியத்தைப் பேச வேண்டும். 2 தீமோத்தேயு 2:23-26 வசனப்பகுதியானது நான்கு கொள்கைகளைப் போதிக்கின்றது: (1) சபை நடத்துனர்கள் முரண்பாட்டை முக்கியப்படுத்தக் கூடாது; சில விஷயங்கள் விவாதிக்கத் தக்கவையாய் இருப்ப

தில்லை. (2) சில வேளைகளில், சத்தியத்திற்காக நிற்பவர்கள் தங்கள் எதிராளிகளைத் திருத்த வேண்டியது அவசியமாக உள்ளது. (3) இந்தத் திருத்துதலானது "சாந்தத்துடன்" செய்யப்பட வேண்டும். (4) திருத்துதலின் நோக்கமானது, விவாதங்களில் வெற்றியடைவதற்காகவோ, இன்னொருவரைக் கீழே தள்ளுதற்காகவோ அல்லது ஒருவர் தம் சுயத்தைக் கட்டி எழுப்புதற்காகவோ அல்ல, ஆனால் திருத்தப்பட்ட ஆத்துமாவை இரட்சிப்பது என்பதாகவே உள்ளது.

இரண்டாவதாக, கள்ள போதகர் தம் தவறை அறிவிக்கும் வரை இயன்ற அளவுக்கு அவர் தமது செய்தியைப் பரப்புவதைத் தடை செய்ய வேண்டும்.

மூன்றாவதாக, செய்யப்பட்டுள்ள மற்றும் செய்யப்படுகின்ற போதனையில் முன்வைக்கப்பட்ட தவறான கருத்துக்களைத் திருத்த அவற்றை எதிர்த்து நிற்றல் என்பது அவர்களின் பொறுப்பாக உள்ளது.

நான்காவதாக, கள்ள போதகர் வெளியரங்கமாய்ப் பாவம் செய்துள்ளார் என்று அவர்கள் நியாயம் தீர்த்து, அப்படிப்பட்டவர் மனந்திரும்ப மறுத்து சபையின் அங்கமாக நிலைத்திருந்தால், அவர்கள் (நடத்துனர்கள்) ஒழுங்கு நடவடிக்கைச் செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். தொடர்ந்து அவர் மனந்திரும்பாத நிலையிலேயே இருந்தால், இந்த ஒழுங்கு நடவடிக்கையானது கடைசியில் அவரை ஐக்கியத்திலிருந்து நீக்குதலுக்கு வழிநடத்தும். இருப்பினும், சபை நடத்துனர்கள் இந்த நடவடிக்கையை எடுக்க முடிவு செய்தால், ஒழுங்கு நடவடிக்கையானது "குற்றவாளியை சபையைவிட்டு வெளியே உதைத்து விடுதல்" என்பதை உள்ளடக்காமல் இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். சபை ஒழுங்கு நடவடிக்கைகள் சபை நடத்துனர்களால் அல்ல ஆனால் சபையினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவர் சத்துருவாக எண்ணப்படாமல், சகோதரனாக எண்ணப்பட்டு புத்தி கூறப்பட வேண்டும் என்பதை சபையானது நினைவில் வைக்க வேண்டும் (2 தெச. 3:15). மூப்பர்களுடனோ அல்லது பிரசங்கியாருடனோ ஒருவர் கருத்து வேறுபடுவதினால் அவரை சபையானது ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்துவதில்லை; அவர் உள்ளூர் சபை நடத்துனர்களுடன் ஒத்துப் போகிறாரா அல்லது வேறுபடுகின்றாரா என்பது கேள்வியாய் இருப்பதில்லை, ஆனால் அவரது போதனையானது வேதாகமத்துடன் ஒத்துப் போகின்றதா அல்லது ஒத்துப் போகவில்லையா என்பதே கேள்வியாய் உள்ளது. ஒழுங்கு நடவடிக்கையானது வசன ரீதியான மற்றும் அன்பான வழிமுறையில் மேற்கொள்ளப் படுவதை நடத்துனர்கள் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இருப்பினும், பிரச்சனையானது அவசியமான விஷயங்களுடன் தொடர்புடையதாயிருந்தால், என்ன நடந்தாலும், சபை நடத்துனர்கள் சத்தியத்திற்காக நிலைநிற்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமான தேவையாக உள்ளது.

## முடிவுரை

மூப்பர்களின் மிகச் சிறந்த முயற்சிகள் இருந்தும் கூட, சபை முழுவதும் "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திலிருந்து" (யூதா 3) திரும்பி விலகிச் செல்லலாம். அப்பொழுது மூப்பர்கள் என்ன செய்ய வேண்டும்? எல்லா சூழ்நிலைகளுக்கும் ஒரே தீர்வு தகுதிப்படாது. அவர்கள் என்ன செய்தாலும், அவர்கள் ஞானமாய்ச் செயல்பட முடியும், அவ்வாறே செயல்பட வேண்டும். அதே வேளையில் வசனரீதியற்ற, சட்ட விரோதமான அல்லது ஒழுக்கமுறைமையற்ற எதையும் செய்யாதிருக்க அவர்கள் தீர்மானிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, கள்ள போதகர்களுக்கு அவர்கள் இடம் அளிக்க இயலாது மற்றும் அவ்வாறு இடமளிக்கக் கூடாது.

சுமார் இருபது ஆண்டுகளாக, அபிலைன் கிறிஸ்தவப் பல்கலைக் கழகத்தின் தலைவராயிருந்த டாண் மோரிஸ் அவர்களைப் பற்றி நான் பின்வரும் நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டுள்ளேன். அது உண்மை என்ற வகையில் எனக்குக் கூறப்பட்டது. அந்த வளாகத்தில் சில வகையான முரண்பாடு எழுந்திருந்தது. அது எதைப் பற்றியது என்பதை நான் அறியவில்லை; இந்த நிகழ்ச்சியின்படி, அது மனச்சான்றின் விஷயமாகவும் சத்தியத்திற்கான டாண் மோரிஸின் ஒப்புக் கொடுத்தலுக்கானதாகவும் இருந்தது என்பதை மட்டுமே நான் அறிகின்றேன். டாண் மோரிஸ் சிற்றாலயத்தில் ஒரு நாள் எழுந்து நின்று பின்வருவது போன்றதைக் கூறினார் என்று இந்நிகழ்ச்சி விவரிக்கின்றது. "இந்தக் கல்லூரியின் கழகத்தினரும், நிர்வாகமும், துறையினரும், பணியாளர்களும் மற்றும் மாணவர்களும் சத்தியத்திற்காக நிலைநிற்கும் வரையில் நானும் அவர்களுடன் சேர்ந்து நிற்பேன். ஆனால் மாணவர்கள் சத்தியத்தைப் புறக்கணித்தால், கழகத்தினரும், நிர்வாகமும், துறையினரும் மற்றும் பணியாளர்களும் சத்தியத்திற்காக நிலை நிற்கும் வரையில் நானும் அவர்களுடன் சேர்ந்து நிற்பேன். ஆனால் துறையினரும், பணியாளர்களும் விலகித் திரும்பினால், கழகத்தினரும், நிர்வாகமும் சத்தியத்திற்காக நிலைநிற்கும் வரையில் நானும் அவர்களுடன் சேர்ந்து நிற்பேன். ஆனால் நிர்வாகமானது சத்தியத்தைப் புறக்கணித்தால், கல்லூரியின் கழகத்தினர் சத்தியத்திற்காக நிலைநிற்கும் வரையில் நானும் அவர்களுடன் சேர்ந்து நிற்பேன். ஆனால் கழகத்தினரும், மற்றவர்கள் யாவரும் சத்தியத்தைப் புறக்கணித்தால், நான் தனியாக நிற்பேன்!"

அது போலவே, சபையின் நடத்துனர்கள், அவசியம் நேர்ந்தால் சத்தியத்திற்காகத் தனியாக நிலைநிற்க வேண்டும்!

---

குறிப்பு:

[1]See Coy Roper, "How Christians Can Disagree Without the Church Disintegrating," *Truth for Today* 10 (June 1989): 35-39.